செ.வெ.எண் : 08 நாள் : 03.03.2021

## சட்டமன்ற பொதுத் தேர்தல் - 2021

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்களின் செய்திக்குறிப்பு

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (03.03.2021) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் அச்சக உரிமையாளர்கள் மற்றும் பதிப்பகத்தார்களுடன் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

### மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்ததாவது:

சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 நடைபெறுவதையொட்டி தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அச்சுக்கூடகங்களின் உரிமையாளர்கள் தங்களிடம் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் எந்தவொரு நிகழ்வுகளுக்கும் அச்சிடப்படும் சுவரொட்டிகள், துண்டு பிரசுரம், விளம்பரத்தட்டிகள் போன்றவற்றில் அச்சுக் கூடத்தின் பெயர், தொலைபேசி எண் மற்றும் எண்ணிக்கையினை கண்டிப்பாக குறிப்பிட வேண்டும். வேட்பாளர் தேர்தல் செலவு கணக்கில் சேர்க்கப்பட வேண்டியுள்ளதால் விளம்பரத்தட்டிகள், சுவரொட்டிகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் அச்சிட்டதற்கான பட்டியலை தேர்தல் பிரிவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

எனவே, தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளை கடைபிடித்து சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 அமைதியான முறையில் நடத்திட அச்சக உரிமையாளர் மற்றும் பதிப்பகத்தார்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.